# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2065/SCIC/2024**

திரு.S.ஆனந்தகிருஷ்ணன் - மேல்முறையீட்டாளர்
தமிழ்நாடு நுகர்வோர் செயல்பாட்டு மையம்
எண்.1/151, G.N.T. ROAD
சோழவரம் - 600 067
திருவள்ளூர் மாவட்டம்.
Phone:73389 62768.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
செங்குன்றம் காவல் மாவட்டம்
செங்குன்றம் - 600 051
ஆவடி காவல் ஆணையரகம்.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **13.12.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 13.01.2024 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 18.06.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 20.02.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13/12/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துறை இயக்குநர் அலுவலகம், மைலாப்பூர், சென்னை-4 அவர்களுக்கு அனுப்பி, அதில் “கலப்பட தீவனம் விற்பது பற்றிய புகாரைச் சார்ந்து, 04/08/2023 அன்று E-5, சோழவரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.அதிசயராஜ் விசாரணைக்கு அழைத்தார். விசாரணையன்று எதிர் தரப்பினர் 2 நாள் அவகாசம் கேட்டதால், என்னிடமும 2 நாள் கழித்து வருமாறு எழுதி வாங்கிக் கொண்டார். அன்றிலிருந்து 02/05/2023, 21/06/2023, 27/08/2023 என பல மனுக்களை மாண்புமிகு முதலமைச்சர், பொதுத் தகவல் அலுவலர், காவல் துறை இயக்குநர் அலுவலகம்,

உயர்திரு.ஏ.கார்த்திக், ஐஏஎஸ், அரசு முதன்மைச் செயலாளர், உயர்திரு.ககன் தீப்சிங் பேடி,ஐஏஎஸ்.தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை செயலர், E5 சோழவரம் காவல் ஆய்வாளர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், என பலருக்கும் மனுக்கள் அனுப்பி இன்று வரை நடவடிக்கை எடுக்காததால், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 - பார்வை - த.ந.மை.கு.எண்.8-13/12/2023 இதன் மீது சட்ட நடவடிக்கை எடுத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.S.ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.பிராங்க் டி ரூபன், காவல் உதவி ஆணையாளர், செங்குன்றம் சரகம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 10/06/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர், தனக்கு மேற்குறிப்பிட்ட கடிதம் கிடைக்கப் பெறவில்லை என முறையிட்டதால், ஆணையத்தின் அறிவுறுத்தலின்பேரில், பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, 10/06/2024 தேதியிட்ட பதிலின் நகலினை அளித்தார். மனுதாரர், தனது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13/12/2023 தேதியிட்ட மனுவினை காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார். அதனை பொதுத் தகவல் அலுவலர்/ காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் அவர்கள் சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து 24/01/2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், ஆவடி காவல் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், செங்குன்றம் காவல் மாவட்டம் அவர்கள் 10/06/2024 தேதியிட்டு, பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. **எனவே, மனுதாரரின் மனுவிற்கு குறித்துரைக்கப்பட்ட காலவரையறையான 30 நாட்களுக்குள் தகவல் அளிக்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், செங்குன்றம் காவல் மாவட்டம், Dr.K.பாலகிருஷ்ணன் (தற்போது துணை ஆணையாளர், சைபர் கிரைம் செல், மத்தியக் குற்றப்பிரிவு, பெருநகர சென்னைக் காவல்) அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005, பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை நேரடியாகவோ அல்லது தனது பிரதிநிதி வாயிலாகவோ 30/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**4. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டு அலுவலர் / கூடுதல் காவல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் அவர்கள் 18/06/2024 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய பதிலில், மனுதாரர் அனுப்பிய புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(f)-ன் படி கோர முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பதில் தவறானது. இனி வருங்காலங்களில், மேல்முறையீட்டு அலுவலர்/ கூடுதல் காவல் ஆணையாளர், ஆவடி காவல் ஆணையரகம் அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன்படியான மனுக்களுக்கு உரிய விதிமுறைகளின்படி சரியான பதில்களை அளிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
மாநில தகவல் ஆணையர்

**//ஆணைப்படி//**

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 2065/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1. பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்,
செங்குன்றம் காவல் மாவட்டம்
GNT Road, Red Hills, Naravarikuppam,
Chennai-600 052.

2.பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்
ஆவடி, சென்னை - 600 054.

3.Dr.K.பாலகிருஷ்ணன்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்,
செங்குன்றம் காவல் மாவட்டம்
(தற்போது காவல் துணை ஆணையாளர்,
சைபர் கிரைம் செல்,
மத்தியக் குற்றப்பிரிவு,
பெருநகர சென்னைக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.

**மேல்முறையீட்டாளர்**

திரு.S.ஆனந்தகிருஷ்ணன்
தமிழ்நாடு நுகர்வோர் செயல்பாட்டு மையம்
எண்.1/151, G.N.T. ROAD
சோழவரம் - 600 067
திருவள்ளூர் மாவட்டம்.
Phone:73389 62768.

நகல்

1.காவல்துறை தலைமை இயக்குநர்
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்
மயிலாப்பூர், சென்னை-600 004.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/Sr.PC